**ஊழியர் சேமலாப நிதியம் - 2025**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஊழியர் சேமலாப நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்று, உறுப்பினர்களின் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் மற்றும் 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகள் இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இவ் அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியம் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியம் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி/ கூட்டுத்தாபனம்/ சபை/ அதிகாரசபை *(பொருத்தமானவாறு)* இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2025 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது தொழில் திணைக்களத்தின் பொதுதிறைசேரி கணினி அறிக்கைகளின்படி இனம் காணப்பட்டிருந்த ரூபா மில்லியன் 27.385 பொறுப்புகள் ஊழியர் சேமலாப நிதியத்தின் இறுதி நிதிக் கூற்றுகளில் இனம் காணப்பட்டிருக்காமை காரணமாக, மீளாய்வுக்குரிய ஆண்டின் | மீளாய்வு ஆண்டில் பொறுப்புகள் மற்றும் செலவுகள் அடிப்படையில் ரூபா மில்லியன் 27.385 அளவுக்குக் குறைவாகக் காட்டப்பட்டிருந்த பொறுப்புகள் எதிர்கால நிதிக் கூற்றுகளில் சரிசெய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | கணக்குப்பதிவு செய்யப்படாத நிதியத்தின் பொறுப்புகளைப் கணக்குப்பதிவு செய்வதற்கும், எதிர்காலத்தில் இத்தகைய கணக்குப்பதிவு விடுபட்டவையை தடுப்பதற்கான தகுந்த வழிமுறைகளைச் செயல்படுத்துவதற்கும் |

| | | |
|---|---|---|
| பொறுப்புகளும் செலவுகளும் ரூபா மில்லியன் 27.385 இனால் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தன. | | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) தொழில் திணைக்கள சுற்றறிக்கை | | | |
| (i) 1999 பெப்ரவரி 11 ஆம் திகதியிட்ட 01/99 எண் கொண்ட தொழில் திணைக்கள சுற்றறிக்கை | (a) நிலுவையிலுள்ள பங்களிப்புகள் மற்றும் மேலதிகக் கட்டணங்களை அறவிடுவதற்கான இறுதி அறிவித்தல்கள் விடுக்கப்பட்ட பின்னரும் உரிய நிதியைச் செலுத்தத் தவறிய மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும் இருப்பினும், நிதியத் தொழில்தருநர்கள் தின் கண்காணிப்புத் தரவு அமைப்பின்படி 253 சந்தர்ப்பங்களுக்குரிய மொத்தம் ரூபா 238,766,949 அளவிலான நிலுவைத் தொகையை அறவிட எந்தவொரு சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. | வழங்கப்பட்ட முகவரிகள் தவறானவையாக இருந்தமை, நிறுவனத்தின் முகவரி மற்றும் பெயரைத் திருத்த வேண்டியிருந்தமை, தரவுத்தொகுதி இற்றைப்படுத்தப்படாமை, வழக்குத் தொடர்வதற்காகத் தொழில்தருநர்களைக் கண்டறிவதில் காணப்பட்ட சிரமங்கள் மற்றும் பல்வேறு குறைபாடுகள் காரணமாக அறிவித்தல்களைத் திருத்த வேண்டியிருந்தமை போன்ற விடயங்களினால் இத்தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. | அறவிடப்படாத பங்களிப்புகள் மேலதிகக் கட்டணங்கள் எவ்வித தாமதமின்றி அறவிடுவதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதுடன், இத்தகைய தாமதங்கள் எதிர்காலத்தில் ஏற்படுவதைத் தடுப்பதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். |
| | (b) நிறுவனப் பரிசோதனைகளை மேற்கொண்டு, நிலுவையிலுள்ள பங்களிப்புகளையும் மேலதிகக் கட்டணங்களையும் அறவிடுவதற்காக | சில நிறுவனங்களுக்கு இறுதி அறிவித்தல்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய நிறுவனங்களுக்குப் | தொடர்புடைய சான்றுகளை விரைவாகப் பூர்த்தி செய்து, நிலுவையிலுள்ள பங்களிப்புகளையும் மேலதிகக் கட்டணங்களையு |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்ப அறிவித்தல்கள் விடுக்கப்பட்டிருந்த போதிலும், 67 சந்தர்ப்பங்களுக்குரிய இறுதி அறிவித்தல்கள் (சிவப்பு அறிவித்தல்கள்) விடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அந்நிறுவனங்களிடமிருந்து நிலுவைப் பங்களிப்புகள் மற்றும் மேலதிகக் கட்டணங்களாக ரூபா 26,383,848 அறவிடப்பட வேண்டியிருந்தது. | போதுமான சான்றுகள் இல்லாமையினால், அந்நிறுவனங்கள் தொடர்பான சான்றுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. | ம் அறவிடுவதற்கான இறுதி அறிவித்தல்களை விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (c) | தொழில் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் போது, தொழில்தருநர்களால் ஊழியர்களுக்கான பங்களிப்புகள் செலுத்தப்படவில்லை என்பது கண்டறியப்படும் பட்சத்தில், அப்பங்களிப்புகளை அறவிடுவதற்குப் போதுமான சான்றுகள் பரிசோதனை சந்தர்ப்பத்திலேயே சேகரிக்கப்பட வேண்டும் என்றபோதிலும், கொழும்பு மேற்கு அதிகாரப் பிரதேசத்தின் ஹோட்டல் கைத்தொழில் சார்ந்த நிறுவனம் ஒன்றில் அவ்வாறு சான்றுகள் சேகரிக்கப்பட்டிருந்தமை ஒரேயொரு ஊழியர் தொடர்பாக மாத்திரமேயாகும். ஏனைய ஊழியர்கள் தொடர்பாகப் போதுமான சான்றுகள் சேகரிக்கப்பட்டிருக்கவி | ஆரம்ப மற்றும் சிவப்பு அறிவித்தல்கள் அனுப்பப்பட்டுள்ள போதிலும், அவற்றுக்காக நிறுவனங்களினால் இதுவரை கொடுப்பனவுகள் செய்யப்படாமையினால், அந்நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிறுவனத்திற்கு விடுக்கப்பட்ட அறிவித்தல்களுக்காகச் செலுத்தப்படாமலிருந்த ஊ.சே.நி நிதிகளில் பெருமளவானவை தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன், அறவிடப்பட முடியாத ஏனைய அறிவித்தல்களுக்காகவும் வழக்குத் தொடர்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நிலுவையிலுள்ள பங்களிப்புகளை அறவிடுவதற்குத் தேவையான சான்றுகளைப் பரிசோதனை சந்தர்ப்பத்திலேயே முழுமையாகச் சேகரித்து, தொடர்புடைய நிதிகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ல்லை என்பதுடன் ரூபா 438,003,820 நிலுவைப் பங்களிப்பு அறவிடப்பட வேண்டியிருந்தது. | | |
| (ii) | 2000 பெப்ரவரி 10 ஆம் திகதியிட்ட 6/2000 எண் கொண்ட தொழில் திணைக்கள சுற்றறிக்கை 1(IV) பந்தி | நிதியத்தின் கண்காணிப்புத் தரவுத்தொகுதியின்படி, 06 மாவட்ட தொழில் அலுவலக அதிகாரப் பிரதேசங்களுக்குச் சொந்தமான 41,207 செயலிலுள்ள நிறுவனங்கள் காணப்பட்டன. நீண்டகாலமாகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாத நிறுவனங்களைப் பரிசோதனைக்காகத் தெரிவு செய்ய வேண்டும் எனச் சுற்றறிக்கைகள் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 8,950 நிறுவனங்கள் மாத்திரமே பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, செயலிலுள்ள 32,257 நிறுவனங்கள் அல்லது மொத்த செயலில் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கையில் அண்ணளவாக 78 சதவீதமானவை 2000 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தொழில் உத்தியோகத்தர் ஒருவரால் மாதமொன்றுக்கு 20 அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்கள் பரிசோதிக்கப்படுவதுடன் , அந்நிறுவனங்களுள் செயலிழந்த 10 நிறுவனங்களை உதவித் தொழில் ஆணையாளர் தெரிவு செய்து பரிசோதனைக்காக வழங்குகின்றார். நீதிமன்றக் கடமைகளில் ஈடுபடுதல், மேலதிக நிறுவனப் பரிசோதனைகள், பெண்கள் இரவுச் சேவையில் ஈடுபடுத்தப்படும் நிறுவனங்களைப் பரிசோதித்தல், 05 நாட்கள் வேலை முறைமைப் பரிசோதனைகள் போன்ற பணிகள் ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பங்களில், இந்த 10 நிறுவனங்களைப் பரிசோதிப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. | நீண்டகாலமாகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாத நிறுவனங்களை விரைவாகப் பரிசோதிப்பதுடன், அனைத்து நிறுவனங்களும் உரிய காலத்துக்கு பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதை உறுதிசெய்யும் வகையில் முறையான வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (iii) | 2017 செப்தெம்பர் 21 ஆம் திகதியிட்ட 2017/05 எண் கொண்ட தொழில் திணைக்கள சுற்றறிக்கை | தொழில் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட நிலுவைப் பங்களிப்புகள் மற்றும் மேலதிகக் கட்டணங்களைத் தவணை முறையில் செலுத்துவதற்குத் தொழில்தருநர்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய நிதிகள் செலுத்தப்படாத | தரவுத்தொகுதியைப் பயன்படுத்தி, தவணைகளைத் தவறவிட்ட மற்றும் ஏனைய குறைபாடுகளைக் கொண்ட நிறுவனங்கள் தொடர்பாக முன்னுரிமை அளித்து விசேட கவனம் செலுத்திச் செயற்படுவதற்கான அறிவுறுத்தல்கள் | அறவிடப்படாது காணப்படும் நிலுவைப் பங்களிப்புகளையும் மேலதிகக் கட்டணங்களையும் விரைவாக அறவிடுவதற்கும், எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. மாதிரிப் பரிசோதனையின்படி, 83 சலுகை சந்தர்ப்பங்களுக்கு அமையக் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 376,695,619 இல் ரூபா 94,375,391 ஆனது 2025 திசெம்பர் 31 ஆம் திகதியாகும்போது இன்னும் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அந்நிதிகளை அறவிடுவதற்குச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்கத் தேவையான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1981 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி (திருத்தச்) சட்டத்தின் 03 ஆம் பிரிவு | குறித்த திகதியில் பங்களிப்புகளைச் செலுத்தாத தொழில்தருநர்களிடமிருந்து அத்தாமத காலத்திற்காக மேலதிகக் கட்டணம் அறவிடப்பட வேண்டும் என்றபோதிலும், 2025 ஜீன் 19 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கியின் தரவுத்தொகுதியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பரிசோதனையின் போது, கம்பஹா வலயத்திற்குட்பட்ட 2024 ஆம் ஆண்டுக்காக 30 தொழில்தருநர் நிறுவனங்களிடமிருந்து மொத்தமாக ரூபா 33,076,906 மேலதிகக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்படாத மேலதிகக் கட்டணங்களை அறவிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் சம்பந்தப்பட்ட உதவித் தொழில் ஆணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. | அறவிடப்பட வேண்டியுள்ள மேலதிகக் கட்டணங்களை விரைவாக அறவிடுவதற்கும், எதிர்காலத்தில் இத்தகைய மேலதிகக் கட்டணங்கள் அறவிடப்படாது காணப்படுவதைத் தடுப்பதற்கும் முறையான பின் தொடர்தல் நடைமுறையொன்று கிரமமாகச் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் 23(ஈ) ஆம் பிரிவு | உறுப்பினர் “இலங்கைக்கு மீண்டும் திரும்பும் எண்ணமின்றி“ வெளிநாடு செல்கின்றார் என்பதற்கான அவசியமான உறுதிப்படுத்தல்களை மேற்கொண்டு நன்மைகள் செலுத்தப்பட வேண்டும் என்றபோதிலும், அந் நிபந்தனைகள் சரியாக உறுதிப்படுத்தப்படாமல் 6 சந்தர்ப்பங்களில் மொத்தமாக ரூபா 18,855,603 நன்மைகள் செலுத்தப்பட்டிருந்தன. மேலும், நிரந்தர | உத்தியோகத்தர்களிடம் அதற்கான அவசியமான விழிப்புணர்வு இருந்திருக்கவில்லை என்பதுடன், தற்போது தொடர்புடைய ஆவணங்கள் முறையாகப் பரிசோதிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | தொடர்புடைய சட்டத் தேவைகளையும் ஆவணங்களையும் சரியாக உறுதிப்படுத்திய பின்னரே நன்மைகள் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், தொடர்புடைய வழிகாட்டல்களை இற்றைப்படுத்தி உத்தியோகத்தர்க |

| | | |
|---|---|---|
| வதிவிடத்திற்காக வெளிநாடு செல்லும்போது அவசியமான குடியேற்ற விசா பிரதிகள் சரியாக உறுதிப்படுத்தப்படாமல் 4 நன்மையீட்டாளர்களுக்கு மொத்தமாக ரூபா 13,463,896 நன்மைகள் செலுத்தப்பட்டிருந்தன. | | ளைத் தொடர்ச்சியாக விழிப்புணர்வூட்டுவதற்கும், இத்தகைய தவறுகளைத் தடுப்பதற்கான போதுமான கட்டுப்பாட்டு நடைமுறையொன்றைச் செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா மில்லியன் 549,821 இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா மில்லியன் 511,063 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா மில்லியன் 38,758 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. நிதியத்தின் வட்டி வருமானம் மற்றும் பங்கிலாப வருமானம் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே ரூபா மில்லியன் 51,828 இலும் ரூபா மில்லியன் 1,108 இலும் வளர்ச்சியடைந்திருந்தமை பிரதான காரணங்களாகும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் நிதிசார் உபகரணங்களின் நியாயமான பெறுமதிச் சீராக்கத்தின் மீது ரூபா மில்லியன் 14,354 நட்டம் இனம் காணப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆம் ஆண்டில் விமான நிறுவனமொன்றில் மேற்கொள்ளப்பட்ட ரூபா மில்லியன் 500 முதலீட்டிற்காக இதுவரையிலும் எவ்வித வருமானமும் நிதியத்திற்குக் கிடைத்திருக்கவில்லை என்பதுடன், 2021 திசெம்பர் 31 ஆம் திகதியாகும்போது முதலீடு செய்யப்பட்டிருந்த நிதி நிறுவனமொன்றின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக நிதியத்திற்கு ரூபா மில்லியன் 205.49 இழப்பு ஏற்பட்டிருந்தது. | விமான நிறுவனமானது அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனமொன்றாகும் என்பதுடன், அது நீண்டகாலமாக நட்டமடைந்து வந்ததன் காரணமாக பொதுதிறைசேரியினூடாக வழங்கப்படும் நிதி ஏற்பாடுகளின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றது என்றும், நிதி நிறுவனத்தின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர், கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் அந்நிறுவனத்தைக் கலைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. | முதலீடுகளை மேற்கொள்ளும்போது இடர்களையும் நன்மைகளையும் சரியாக மதிப்பீடு செய்து, நிதியத்தின் பணத்தைப் பாதுகாப்பாகவும் பயனுள்ளதாகவும் முதலீடு செய்ய வேண்டும் என்பதுடன், இழந்த நிதியை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் வங்கி கணக்கிணக்க கூற்றுக்களில் 2001 ஆம் ஆண்டு முதல் காணப்பட்டு வரும் ரூபா மில்லியன் 101 கொண்ட | ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட நடைமுறையில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட காலத்திற்குள் நோக்கத்தை | ஒப்பந்தக் கடமைகளைக் உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | இணக்கப்பாடு செய்யப்படாத வங்கிக் கணக்கு நிகர நிலுவைகளின் மொத்தத்தொகை தீர்க்கப்படும் வரை நிதி நிலைமை அறிக்கையில் ஒரு பொறுப்பாகக் காட்டப்பட்டிருந்ததுடன், இந்நிலுவைகளைத் தீர்ப்பது சம்பந்தமாக 2020 சனவரி 09 ஆம் திகதி தனியார் நிறுவனமொன்றுடன் ஒப்பந்தமொன்று எட்டப்பட்டிருந்தது. ஒப்பந்தத் திகதியிலிருந்து 08 வாரங்களுக்குள் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றபோதிலும், ஒப்பந்தம் எட்டப்பட்டு பல ஆண்டுகள் கடந்தும் அத்தொடர்புடைய திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் இவ்வறிக்கையின் திகதி வரையிலும் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று, 2020 திசெம்பர் 31 ஆம் திகதியாகும்போது ஒப்பந்தத் தொகையின் 50 சதவீதமான ரூபா மில்லியன் 1.5 அத்தொடர்புடைய நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. | அடைய முடியாமல் போனதுடன், அதற்கான புதிய அணுகுமுறையாக அதற்குரிய வங்கி கூற்றுக்களையும் உள்வாரித் தரவுகளையும் மிகவும் சுயாதீனமான முறையொன்றின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது, எமது கண்காணிப்பின் கீழ் அந்த நிறுவனத்தினால், மேலும் எஞ்சியுள்ள நிலுவைகளைத் தீர்ப்பதற்கான பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. | முறையான பின் தொடர்தல் நடைமுறையொன்றை ச் செயற்படுத்தி, இணக்கப்பாடு செய்யப்படாத வங்கி நிலுவைகளை விரைவாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2025 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது தொழில்தருநர்களிடமிருந்து வழக்குகள் மூலம் அறவிடப்பட்டு இலங்கை மத்திய வங்கியில் வைக்கப்பட்டிருந்த ரூபா மில்லியன் 8,048, தொழில் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்த ரூபா மில்லியன் 220 மற்றும் “நடப்பாண்டு பங்களிப்பு இலக்கம் எண் 01” கணக்கில் காணப்பட்ட காசு அடிப்படையிலான ரூபா மில்லியன் 14,778 என்பன உரிய உறுப்பினர் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பல்வேறு காரணங்களினால் தீர்க்கப்படாத நன்மைகள் மற்றும் உரிமை கோரப்படாத நன்மைகள் ரூபா மில்லியன் 575, குறை/மிகை பங்களிப்புகள் ரூபா மில்லியன் 1,686 மற்றும் குறை/மிகை நன்மைச் செலுத்தல்கள் ரூபா மில்லியன் 516 என்பனவும் காணப்பட்டதுடன், இந்நிலுவைகளை விரைவாகத் | “சீ” அறிக்கைகளின்றி அனுப்பிவைக்கப்பட்ட பங்களிப்புகள் மற்றும் அரைகுறையான அல்லது முரண்பாடுகளைக் கொண்ட “சீ” அறிக்கைகளுடன் அனுப்பிவைக்கப்பட்ட பங்களிப்புகள் காணப்படுகின்றமை போன்ற பல்வேறு காரணங்களினால், இந்நிலுவைகளைத் தனிநபர் கணக்குகளில் வரவு வைப்பதில் சிரமங்கள் காணப்படுகின்றன.இந்நிலுவைகளைத் தீர்ப்பதற்காக, உறுப்பினர் பெயர்கள் மற்றும் இலக்கங்களில் முரண்பாடுகளைக் கொண்ட பங்களிப்பு விபர அறிக்கைகள் தொடர்பாகத் தொழில்தருநர்களை விழிப்புணர்வூட்டுதல், குறைபாடுகளைக் கொண்ட “சீ” அறிக்கைகள் மற்றும் பண விபர அறிக்கைகளை இணையவழி | உறுப்பினர் கணக்குகளில் வரவு வைக்கப்படாமலும் தீர்க்கப்படாமலும் காணப்படும் நிதி நிலுவைகளை இனம் கண்டு, அவற்றை உரிய உறுப்பினர் கணக்குகளில் விரைவாக வரவு வைப்பதற்கும், பயனுள்ள பின் தொடர்தல் நடைமுறையொன்றைச் செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்க்குமாறு 2013, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அரச கணக்குகள் குழுவினாலும் உத்தரவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, நீண்டகாலமாக உறுப்பினர் கணக்குகளில் வரவு வைக்கப்படாமலும் தீர்க்கப்படாமலும் காணப்படும் கணிசமான அளவு நிதி நிலுவைகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | முறைமையினூடாகச் சேகரித்தல், தானியங்கி உறுப்பினர் கணக்கு இற்றைப்படுத்தல் நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | ஊழியர் சேமலாப நிதி நன்மைகளைச் செலுத்தும் போது பயன்படுத்தப்படும் உள்ளக அறிவுறுத்தல் கோவை தற்போதைய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க இற்றைப்படுத்தப்பட்டிருக்காமை காரணமாக, நன்மைகளைச் செலுத்தும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் பரிசோதிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் சம்பந்தமாக முறையான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட அறிவுறுத்தல் கோவை ஒன்று காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | நன்மைகளைச் செலுத்தும் போது பயன்படுத்தப்படும் உள்வாரி அறிவுறுத்தல் கோவையைத் தற்போதைய விதிகளுக்கு இணங்குமாறு தயாரிப்பதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. | தற்போதைய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க முறையான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட அறிவுறுத்தல் கோவையொன்றைத் தயாரித்து, தொடர்புடைய உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டுவதற்கும், தேவைக்கேற்ப அதனைத் தொடர்ச்சியாக இற்றைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தொழில் செயலகக் கட்டிடத்தின் 4, 5 மற்றும் 6 ஆம் மாடிகளின் நவீனமயமாக்கல் பணிகளுக்கான ஆலோசனைச் சேவைகளுக்காக ரூபா மில்லியன் 12.775 மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2007 ஆம் ஆண்டின் ஆலோசனைச் சேவை வழிகாட்டி கோவையின் 3.14.3 ஆம் வழிகாட்டலுக்கு இணங்க, ஆலோசனைச் சேவை பெறுகை குழுவொன்றை நிறுவி அதன் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்ளாமலும், போட்டித்தன்மையுடனான பெறுகை செயல்முறையொன்றைப் பின்பற்றாமலும் ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்காக கட்டிடத் திணைக்களம் தெரிவு | தொடர்புடைய பணிகளை நிறைவேற்றுவதற்குத் திணைக்களத்தினுள் விசேட நிபுணத்துவ அறிவுடைய போதுமான பணியாளர்கள் இல்லாதமையினால், விசேட நிபுணத்துவத் திறமைகளைக் கொண்ட பணியாளர்களைக் கொண்ட அரச திணைக்களமான கட்டிடத் திணைக்களத்தினூடாக மேற்கூறப்பட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இப்பணிக்காக 2021 ஆம் ஆண்டில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அம்மதிப்பீடுகளுக்கு இணங்க கட்டிடத் திணைக்களத்தினால் ஆலோசனைச் சேவைகளுக்காக | ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும்போது தொடர்புடைய ஆலோசனைச் சேவை வழிகாட்டல்களையும் பெறுகை நடைமுறைகளையும் சரியாகப் பின்பற்றி, பெறுகைகளை முறையாகத் திட்டமிட்டு நிதிகளைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்தது. | அறவிடப்படும் கட்டணம் மொத்தச் செலவு மதிப்பீடு 5 சதவீதம் ஆகும். அம்மதிப்பீடு அண்ணளவாக ரூபா மில்லியன் 9.5 ஆகும். எனவே, ஆலோசனைச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காகப் புறம்பான நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத் திட்டங்களுக்காக ஆலோசனைச் சேவை வழிகாட்டி கோவையின் 3.14.3 இன் படி செயல்படுவதாக அறியத்தருகின்றேன். | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதித் திணைக்களத்தின் அகக் கணக்காய்வுப் பணிகள் இலங்கை மத்திய வங்கியின் அகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2025 ஆம் ஆண்டுக்குரிய அகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை காரணமாக, அண்ணளவாக ரூபா திரில்லியன் 4.8 கொண்ட உறுப்பினர் நிதியத்தை முகாமை செய்கின்ற அத்திணைக்களம் சம்பந்தமாகப் போதுமான அகக் கணக்காய்வுப் செயல்முறையொன்று செயற்படுத்தப்பட்டிருந்ததை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் போனது. மேலும், நிதியத்தின் நிர்வாகப் பணிகள் சம்பந்தப்பட்ட கணக்காய்வுப் பணிகளை வழிநடத்துகின்ற தொழில் திணைக்களத்தின் அகக் கணக்காய்வுப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 17 ஆக இருந்தபோதிலும், 2025 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது உண்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை 6 பேராகக் குறைந்திருந்தமையினால், நிதியத்தின் நிர்வாகப் பணிகள் சம்பந்தப்பட்ட அகக் கணக்காய்வுச் | 2025.12.31 ஆம் திகதியாகும் போது தொழில் திணைக்களத்தின் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை மிக உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. திணைக்களத்தினால் வழங்கப்படும் பொதுச் சேவைகளைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்காக, பல்வேறு அலுவலகங்கள் மற்றும் பிரிவுகளுக்குப் போதுமான பணியாளர்களை ஈடுபடுத்த வேண்டியிருந்தமையினால் பணியாளர்களை முகாமை செய்ய வேண்டியிருந்தது. இதன் காரணமாக, அகக் கணக்காய்வுப் பிரிவின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கவில்லை. அத்தொடர்புடைய வெற்றிடங்கள் குறித்து அரச நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு எழுத்துப்பூர்வமாக அறியவிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டுக்கு அமைவாக தொழில் திணைக்களத்தின் அகக் கணக்காய்வுப் பிரிவினால் 22 கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதித் திணைக்களத்தின் அகக் கணக்காய்வுப் பணிகள் | நிதியத்தின் நிதி மற்றும் செயல்பாட்டு நடவடிக்கைகள் போதுமான அகக் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு முறையான நடைமுறையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். அவ் அகக் கணக்காய்வு அறிக்கைகளை உரிய காலத்தில் கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கும், நிதியத்தின் நிர்வாகப் பணிகள் சம்பந்தப்பட்ட அகக் கணக்காய்வுக் கடமைகளைப் பயனுள்ள வகையில் நிறைவேற்றுவதற்கு அவசியமான மனித மற்றும் ஏனைய வளங்களைப் போதுமானதாக வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| செயல்முறையையும் போதுமான அளவில் செயற்படுத்துவதற்குச் சவால்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, நிதியத்தின் அகக் கணக்காய்வுச் செயல்முறை மற்றும் அகக் கட்டுப்பாட்டு முறைமை என்பவற்றை மேலும் வலுப்படுத்துவது அவசியமாகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | 2024 ஆம் ஆண்டு முடிவடையும் போது, 05 கணக்காய்வுகளுக்குரிய பரிந்துரைகள் கிடைக்கப் பெற வேண்டியிருந்த நிலையில், இக்கணக்காய்வுகள் 2025 ஆம் ஆண்டிற்குள் அகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக, 2024 ஆம் ஆண்டு முடிவடையும் போது, ஊழியர் சேமலாப நிதித் திணைக்களத்தின் பணிகளுக்குரிய 10 கணக்காய்வுக் குழுத் தீர்மானங்கள் / பரிந்துரைகள் கிடைக்கப் பெற வேண்டியிருந்த நிலையில், இவை 2025 ஆம் ஆண்டிற்குள் அகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் கண்காணிக்கப்பட்டு வந்தன. |